*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.211/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-7 (LW-8)***

*Name / Father's Name:* ***திரு.உதயகுமார் த/பெ. சங்கரைய்யா***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **17.02.2026.**

துவக்க நேரம் 01.12 A.N

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர். 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது சேலம் மாவட்டம், கணினிவழி குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.01.2023ம் தேதி மாலை 04.00 மணியளவில் நான், தம்மம்பட்டி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபொழுது, ஆத்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து முன்னதாக கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று நான் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வெங்கட்ராமன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து, அதன் அடிப்படையில் தம்மம்பட்டி கவால் நிலைய குற்ற எண்.18/2023 சட்ட பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) இ.த.ச- ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2) பின்னர் அசல் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு, வழக்காவணங்களை விசாரணைக்காக எடுத்துக்கொண்டு, சம்பவம் நடந்த அன்றே மாலை 05.00 மணியளவில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சாட்சிகள் சூரியா மற்றும் பாப்பாத்தி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 வரையில் உள்ளவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) சம்பவம் முதற்கட்ட விசாரணையில் உண்மை எனத் தெரிய வந்ததால் இவ்வழக்கின் இரண்டு எதிரிகளையும் கைது செய்ய தேடி வந்த நிலையில் எதிரிகள் இருவரும் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று கனம் நீதிமன்றத்தில் முன்னிலையானதாக தெரியவந்ததால் எதிரிகளை கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கின் எதிரி பெருமாள் என்பவர் சம்பவத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்ததால் அவரை இவ்வழக்கிலிருந்து நீக்கி எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்தேன். **(எதிரி நீக்கல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) வழக்கில் காயமுற்ற நபர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.விஜயகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுன் இணைந்த காயச்சான்றிதழ்களை பெற்றேன். பின்பு வழக்கின் விசாரணையை முடித்து, சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் சம்பவம் உண்மை எனத் தெரிய வந்ததால் வழக்கு பதிவு செய்த பிரிவுகளின் கீழ் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அ.சா.1 வெங்கட்ராமனின், மகன்தான் இவ்வழக்கின் இரண்டாம் எதிரி என்று சொன்னால் சரிதான். புகார்தாரர் அவரதுபுகாரில் கடந்த 26.01.2023 அன்று பகல் 02.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை, பகல் 11.00 மணியளவில் நடந்ததாக சொல்லியுள்ளார்.

2) புகாரில், முத்தையன், என்னை முதுகில் அடித்தார் என்று சொல்லியுள்ளாரா என்றால் செல்வராணியை முத்தையன் முதுகில் அடித்ததாகத்தான் சொல்லியுள்ளார். அ.சா.1, 2 ஆகியோர்கள், எதிரிகளை தாக்கியதாக 1ம் எதிரி கொடுத்த புகாரின் பேரில், அ.சா.1, 2 ஆகியோர்களுக்கு எதிராக இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

3) மாதிரி வரைபடத்தில், செல்வராணியின் நிலத்திற்கும், சுமதி நிலத்திற்கும் தனித்தனியே வண்டிப்பாதை உள்ளதா என்றால் இல்லை, பொதுவண்டிப்பாதை உள்ளது. மேற்படி நபர்களின் நிலத்திற்கு பொதுவண்டிப்பாதை உள்ளதால் இவ்வழக்கு சம்பவத்தில் சொல்லியுள்ள செல்வராணி, சுமதி நிலத்தின் வழியாக எதிரிகள் வண்டியை ஓட்டிவரவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

4) நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றும், சாட்சிகளை சரிவர விசாரிக்காமல், புகார்தாரருக்கு ஆதரவாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் சரிவர விசாரணை செய்திருந்தால் எதிரிகளுக்கெதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்யவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது என்றாலும், மேலும் வழக்கை சரியான புலன் விசாரணை செய்திருந்தால் யார் சரியான குற்றவாளி என்று முடிவு செய்து அவர்களுக்கு எதிராக மட்டும் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 01.26 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.02.17 16:20:49 +0530

Judicial Magistrate No.2, Attur.